2019 ஜனவரி 7]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், சிற்றம்பாக்கம், அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலின் திருக்குளத்தினை இந்து சமய அறநிலையத் துறைமூலம் சீரமைக்க வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. கொப்பரைத் தேங்காய் கொள்முதல் விலை உயர்வுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம். இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒட்டுமொத்த தென்னை விவசாயிகள் சார்பாக இரண்டு மாத காலங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். நீண்டகாலமாக கொப்பரைத் தேங்காயினுடைய விலையை, 'குறைந்தபட்ச ஆதார விலை–*minimum support price' *75 ரூபாய் 11 பைசாவிற்குமேல் மத்திய அரசு உயர்த்தாமல்*

இருக்கிறது என்பதைக் கூறி, விவசாயிகள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மனுவை கொடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இதுவரை இல்லாத வகையில் ஒரே சமயத்தில், 75 ரூபாய் 11 பைசாவாக இருந்த கொப்பரைத் தேங்காயினுடைய விலை இன்று 95 ரூபாய் 21 பைசாவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டபடி உயர்த்தப்பட்டதன் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக தென்னை விவசாயிகள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சிப் பெருங்கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். அதன்காரணமாக பொள்ளாச்சி சுற்றுவட்டாரம், கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் 15 ரூபாயாக இருந்த ஒரு தேங்காயின் விலை இன்று, 21 ரூபாய், 22 ரூபாய் என்று வெளி மார்க்கெட்டில் விற்கின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்ற காரணத்தாலும், திருச்சிராப்பள்ளி சுற்று வட்டாரப் பகுதிகளில் உற்பத்தியாகும் ஒரு தேங்காயின் விலை 13 ரூபாயிலிருந்து 16 ரூபாய், 17 ரூபாய் என்று உயர்ந்திருக்கின்ற காரணத்தாலும் தமிழகம் முழுவதும் மட்டுமல்லாமல் கர்நாடகா மற்றும் கேரள மாநில கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யும் தென்னை விவசாயிகளும் மகிழ்ச்சியிலே ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு, மொத்தமாக தென்னை விவசாயிகள் அனைவரின் சார்பாகவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கொப்பரைத் தேங்காய்க்கு கூடுதலாக 20 ரூபாய் பெற்றுத் தந்ததற்காக நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)